சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

6 பகுதி-4
சிறப்பிதழ்
Special Issue

# தொகை அக அடைநூல்களில் வல்லின ஓரெழுத்தொரு மொழி

சு. செங்குகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர் (18221074021006), வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம்
ம.தி.தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி 627 010, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் சு. உமா
உதவிப்பேராசிரியர் & நெறியாளர், அன்னை ஹாஜிரா பெண்கள்கல்லூரி,
மேலப்பாளையம், தமிழ்நாடு, இந்தியா.

சங்க இலக்கியங்களுள் தொகை நூல்கள் என அழைக்கப் பெறுவது எட்டுத் தொகை நூல்கள் ஆகும். இவற்றுள் அகநூல்கள் ஐந்து. அவற்றுள் அடைமொழியுடன் அமைந்தநூல்கள் மூன்று உள்ளன. அவை நற்றிணை, குறந்தொகை, ஐங்குறுநூற்று ஆகும். அவற்றிலமைந்துள்ள வல்லின ஓரெழுத்தொருமொழியைக் கண்டறிந்து வகைப்படுத்தி மெய்ம்மைகளைக் கண்டறிந்து இக்கட்டுரை விளக்குகிறது.

**வல்லின ஓரெழுத்து ஒருமொழி**

தொகை அகஅடைநூல்களில் **கை, கோ, சா, தீ, தூ, பா, பூ, பை** என்ற வல்லின ஓரெழுத்து ஒருமொழி புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது.

**கை – கரம்**

கை என்பது விலங்கு மற்றும் மனிதனின் உடல் உறுப்பைக் (கரம்) குறிக்கும் வகையில் தொகை அகஅடை நூல்களில் அமைந்துள்ளது.

சான்றாக

**அசுணம் கொல்பவர் கை போல் நன்றும் (மாறோக்கத்து நப்பசலையார்: குறிஞ்சி: நற்.304 : 10)**

என்பதனைச் சுட்டலாம்.

இதே பொருளில் இதே சொல்லில் குறுந்தொகை **8, 58 , 61, 117, 199, 342** ஆகிய பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சான்றாக

**கையில் ஊமன் கண்ணின் காக்கும்**
**(வெள்ளிவீதியார் : குறு : 58 : 4)**

என்ற வரிளைச் கூறலாம்.

**கை - துதிக்கை**

துதிக்கை என்னும் பொருளில் குறந் தொகை *141*, ஐங்குறுநூறு **37, 255, 319** ஆகிய பாடல்களில் **கை என்னும் வல்லின ஓரெழுத்து ஒருமொழ** துதிக்கை என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவை

**குறுங்கை இரும்புலிக் கொலைவல் ஏற்றை (மதுரைப் பெருங்கொல்லன: : குறிஞ்சி : குறு. 141 : 5)**

**அஞ்சாயோ இவள் தந்தை கை வேலே (ஓரம்போகியார் : மருதம் : ஐங்.: 60 : 4)**

**கடற்கோடு செறிந்த மயிர் வார் முன்கை (அம்மூவனார் : நெய்தல் : ஐங்.: 191 : 1)**

**பெருங்கை யானை இருஞ்ஞ் சினம் உறைக்கும் (ஓதலாந்தையார் : பாலை :ஐங்.: 352 : 3)**

ஆகும்.

**கை - சாமர்த்தியம்**

கை என்ற ஓரெழுத்தொரு மொழி சாமர்த்தியம் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

**கை வல் சீறி யாழ்ப் பாண! நுமரே (பேயனார் : முல்லை :ஐங். : 472: 1)**

சா - இறத்தல்

சா என்ற ஓரெழுத்தொரு மொழி இறத்தல் என்னும் பொருளில் பாடலில் ஆளப்பட்டுள்ளது. சான்றாக நண்டு பிறந்த உடனேயே அதன் தாயைச் சாகடித்து விடும் என்ற பொருளில் அமைந்த